# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2156/10 - 2019 දෙසැම්බර් මස 30 වැනි සඳුදා - 2019.12.30

*2156/10 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. பி. 21/1978* (X) (A).

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும்* PB *4833 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதிய 2053/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை, அக்கட்டளைக்கான அட்டவணை* I *மற்றும்* II *இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய அட்டவணை* I *மற்றும்* II *இனை பின்வருமாறு இடுவதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

**"*அட்டவணை*** I

*நிபந்தனைகள்*

நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் ஆனது, கணினி முறைமைப் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான பொறியியல் இளமாணி தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பின்வரும் பட்டங்கள் தொடர்பான பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்க்கும்போது, க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் பௌதிக விஞ்ஞானப் பாடத்துறையில் மூன்று (3) சாதாரண சித்திகளென்ற ('S') அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

**அட்டவணை** II

| *நிரல் I*<br><br>*பட்டங்கள்* | *நிரல் II*<br><br>*பட்டங்களுக்கான சுருக்கீடுகள்* |
|---|---|
| கணினி முறைமைப் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான பொறியியல் இளமாணி | பிஎஸ்சி பொறியியல் (சிறப்பு)<br>(கணினி முறைமைப் பொறியியல்) |

கலாநிதி பந்துல குணவர்த்தன,
உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.

கொழும்பு,
2019, திசெம்பர் 27.

01-370/1

---

ச. வ. பி. 21/1978 (X) (A).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும் PB 4833 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதிய 2121/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணை II ஐ, இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய அதற்கான நிரல் I இலும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற "சர்வதேச வர்த்தகத்தில் கௌரவ முகாமைத்துவ இளமாணி" என்னும் பதிவை உடனடுத்துப் பின்னர் இதற்கான அட்டவணை II இல் முறையே நிரல் I மற்றும் நிரல் II இன்கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

**அட்டவணை** I

நிபந்தனைகள்

நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் ஆனது, மின்சார மற்றும் இலத்திரனியல் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான பொறியியல் இளமாணி மற்றும் எந்திர மின்னணுவியல் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான பொறியியல் இளமாணி தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்கள் தொடர்பாக பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாணவர்களைச் சேர்க்கும்போது, க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் பௌதீக விஞ்ஞானப் பாடத்துறையில் மூன்று (3) சாதாரண சித்திகளென்ற ('S') அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| நிரல் I<br>பட்டங்கள் | நிரல் II<br>பட்டங்களுக்கான சுருக்கீடுகள் |
|---|---|
| மின்சார மற்றும் இலத்திரனியல் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான பொறியியல் இளமாணி | பிஎஸ்சி பொறியியல் (சிறப்பு) (மின்சார மற்றும் இலத்திரனியல் பொறியியல்) |
| எந்திர மின்னணுவியல் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான பொறியியல் இளமாணி | பிஎஸ்சி பொறியியல் (சிறப்பு) (எந்திர மின்னணு வியல் பொறியியல்) |

கலாநிதி பந்துல குணவர்த்தன,
உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.

கொழும்பு,
2019, திசெம்பர் 27.

01-370/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.